


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 273 | 4 Pages | 1.5.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 273 | 4 பக்கங்கள் | 1.5.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**கணைகொடியது யாழ்கோடு செவ்விதாங் கனை**

**வினைபடு பாலாற் கொளல்**

**விளக்கம்:**

நேராகத் தோன்றினும் அம்பு கொடியது; வளைவுடன் தோன்றினாலும் யாழின் கொம்பு நன்மையானது. மக்களின் பண்புகளையும் செயல்வகையால் உணர்ந்துகொள்ள வேண்டும்.

## பஹல்காம் தாக்குதல்: முப்படைகளுக்கு முழு சுதந்திரம் பிரதமர் மோடி உறுதி



புதுடெல்லி, மே1

இந்தியாவின்தலைபோன்று உள்ள காஷ்மீரை குறிவைத்து, பயங்கரவாதிகள் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வந்தனர். மத்திய அரசு எடுத்தகடும்நடவடிக்கையால் காஷ்மீரில் சமீபகாலமாக பயங்கரவாத செயல்கள் ஒடுக்கப்பட்டு இருந்தது. ஆனால் கடந்த 22ந் தேதி யாரும் எதிர்பாராத நிலையில் காஷ்மீர் மாநிலம் பஹல்காம் பகுதியில் பயங்கரவாதிகள் கொடூர தாக்குதலை நடத்தினர்.

மிருகத்தனமான இந்த தாக்குதலில் சுற்றுலா பயணிகள் உள்பட 26 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இத்தகைய கொடுஞ்செயலில் ஈடுபட்டது தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான லஷ்கர்இதொய்பாவின் கிளை அமைப்பான டி.ஆர்.எப். என்பது தெரியவந்துள்ளது. இதன் பின்னணியில் பாகிஸ்தான் இருக்கிறது என்று இந்தியா குற்றம் சாட்டி வருகிறது.

அப்பாவி மக்களைகொன்ற பயங்கரவாதிகளுக்கு, கற்பனைசெய்யமுடியாத அளவுக்குதண்டனைபெற்றுத்தருவோம்என்றுபிரதமர்மோடி ஆவேசத்துடன் கூறினார். அதனை தொடர்ந்து மத்திய அரசு பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. நேற்று பிரதமர் மோடியை அவரது இல்லத்தில் மத்திய பாதுகாப்புத்துறை ராஜ்நாத் சிங் சந்தித்து ஆலோசனை நடத்தி இருந்தார்.

இந்தநிலையில், பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு பதிலடி தருவதற்கான உயர்மட்ட ஆலோசனைகூட்டம், பிரதமர் மோடி தலைமையில் டெல்லியில் இன்று மாலை நடைபெற்றது. இக்கூட்டத்தில் பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், முப்படைகளின் தலைமை தளபதி அனில் சவுகான், முப்படை தளபதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் பேசிய மோடி,

எதிரிகள் மீது எந்த இடத்தில், எந்த நேரத்தில் எந்த இலக்குகள் மீது தாக்குதல் நடத்துவதில் முப்படைகள், தாங்களே முடிவு செய்து கொள்ளலாம். எதிரிக்கு பதிலடி தர, இலக்குகளை தீர்மானிக்கும் முழு சுதந்திரம் ராணுவத்திற்கு உள்ளது. ராணுவம், படைகள் மீது முழு நம்பிக்கை இருக்கிறது. பயங்கரவாதத்திற்கு எதிராக மரண அடி கொடுக்க வேண்டியது நமது நாட்டின் உறுதிப்பாடு என்றார்.

## உருகி போன பல்பு; காங்கிரசை சாடிய சத்தீஷ்கார் முதல்மந்திரி



ஜெய்ப்பூர், மே.1

ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ள பஹல்காமில் கடந்த 22ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் அப்பாவிசுற்றுலாபயணிகள் 26 பேர்பலியானார்கள். இது நாடுமுழுவதும்அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில், இது தொடர்பான அனைத்து கட்சி கூட்டம் ஒன்றை காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் இணைந்து நடத்தின.

இதில் பிரதமர் மோடி பங்கேற்காததற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், பிரதமர் காணாமல் போய் விட்டார் என எக்ஸ் தளத்தில், காங்கிரஸ் தெரிவித்து இருந்தது. இதற்கு பதிலடி தரும் வகையில் சத்தீஷ்கார் முதல்மந்திரி விஷ்ணு தியோ சாய் செய்தியாளர்களிடம் பேசும்போது, காங்கிரஸ் கட்சி உருகி போன ஒரு பல்பு. நாட்டு மக்களின் நம்பிக்கையை அவர்கள் இழந்துவிட்டனர்.

அதனால், அர்த்தமற்ற விசயங்களை அவர்கள் கூறி வருகின்றனர் என்றார். காங்கிரஸ் நடத்திய அரசியல் சாசன பாதுகாப்பு பேரணியை பற்றி குறிப்பிட்ட அவர், பல முறை அவர்களே அரசியலமைப்பை அச்சுறுத்தலின் கீழ் வைத்திருந்தனர்.

நெருக்கடி நிலை காலத்தில் காங்கிரஸ் தலைவர்கள் அல்லாதோர் சிறையில் அடைக்கப்பட்டனர். ஜனநாயக படுகொலை நடந்தது. சுயநல நோக்கங்களுக்காக அவர்கள் பல்வேறு முறை அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டனர். அதனால், இந்த பேரணி அவர்களுக்கு பயன் தராது என்றார்.

பிரதமர்மோடி நேற்று (செவ்வாய் கிழமை) மாலை மத்திய பாதுகாப்புதுறை மந்திரி ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், முப்படைகளின் தலைமை தளபதி, முப்படைகளின் தளபதிகள் ஆகியோரை சந்தித்து பேசினார். இந்த உயர்மட்ட கூட்டத்தில் பல முக்கிய விசயங்கள் ஆலோசிக்கப்பட்டன. முப்படைகளுக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டு உள்ளது என கூட்டத்தில் அவர் கூறினார்.

## மே 1 ந்தேதி முதல் திருப்பதி ஏழுமலையான் கோவிலில் விஐபி தரிசனத்தில் மாற்றம்



திருப்பதி, மே.1

பள்ளி, கல்லூரிகளுக்கு கோடை விடுமுறை விடப்பட்டுள்ளதால் திருப்பதி ஏழுமலையான் கோவிலில் கூட்டம் அலைமோதுகிறது. பக்தர்களின்கூட்டத்தை கவனத்தில் கொண்டு வரும் மே 1ந் தேதி முதல் ஜூன் 15ம் தேதி வரைதரிசனம் மற்றும் தங்கும் விடுதிகளுக்கு சிபாரிசு கடிதங்கள் ஏற்கப்படாது என தெறிக்கப்பட்டுள்ளது.

எனவே நேரில் வரும் விஐபி பக்தர்களுக்கு வழக்கம் போல் விஐபி பிரேக் தரிசனம் அமல்படுத்தப்படும் என்றும் தேவஸ்தானம் அறிவுறுத்துள்ளது.

இந்த விஐபி பிரேக் தரிசனத்தை வெள்ளோட்டமாக மே 1ந்தேதி முதல் காலை 6:00 மணிக்கு அனுமதிக்கலாம் எனவும் தேவஸ்தானம் முடிவு செய்துள்ளது.

# 2026 தேர்தலில் 234 தொகுதிகளிலும் திமுக வெற்றி பெற்றாலும் ஆச்சரியமில்லைதான்.. முதல்வர் ஸ்டாலின்



சென்னை

2026ம் ஆண்டு நடைபெறும் தமிழக சட்டசபை தேர்தலில் 234 தொகுதிகளிலுமே திமுக வென்றாலும் ஆச்சரியமில்லைதான் என்று திமுக தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சென்னையில் திமுக தலைமைய கமான அண்ணா அறிவாலயத்தில் திமுக எம்.எல்.ஏ. மயிலை வேலு இல்லத் திருமண விழாவில் முதல்வர் ஸ்டாலின் இன்று பேசியதாவது: தமிழ்நாட்டில் திராவிட மாடல் அரசு, பிற மாநிலங்களுக்கு உதாரணமான ஒரு ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறது. தேர்தல் நேரத்தில் தரப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறோம். அந்த வாக்குறுதிகளில் நிறைவேற்றப்படாதவற்றையும் நிறைவேற்றுவோம்.

2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் திமுக கூட்டணி 200 அல்ல 220 இடங்களில் வெற்றி பெறும் என்று கூட சிலர் பேசினர். இதில் என்ன கஞ்சம்? 234 தொகுதிகளிலுமே நாம் வெற்றி பெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

நான் செல்லும் இடங்களில் மக்களின் வரவேற்பைப் பார்க்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் பயணம் செய்கின்ற போது 3 அல்லது 4 கிலோமீட்டர்தொலைவுக்கு நடந்து செல்கிறேன். அந்த நேரத்தில் மக்கள் தருகிற வரவேற்பைப் பார்க்கும் போது மெய் சிலிர்க்கும்.

நம்மை எதிர்ப்பவர்கள் எத்தகைய கூட்டணியை அமைத்தாலும் ஒரு கை பார்ப்போம் என்ற நிலைமையில் நாம் பணியாற்றி வருகிறோம். ஆகையால் நாம் எதற்குமே கவலைபட்ட வேண்டியது இல்லை. அமலாக்கத்துறை, சிபிஐ எதற்கும் நாம் அஞ்ச வேண்டாம். நாம் நெருக்கடியை எமர்ஜென்சியையே பார்த்து வளர்ந்தவர்கள். ஆகையால் தமிழ்நாட்டில் திமுக, 7வது முறையாக நிச்சயம் ஆட்சியை அமைக்கும் என்றார்.

## திமுக தலைமை நடவடிக்கை எடுக்குமா?



சென்னை சேத்துப்பட்டு 108 அவது வட்ட துணைச் செயலாளர் சி.டி. சுரேஷ் என்பவர் போலி சாதி சான்றிதழ் மூலம் அரசின் சலுகைகளை பெற்று வருவதாக புகார் எழுந்துள்ளது எளியோர் மேம்படுவதற்காக சாதி அடிப்படையில் சில முன்னுரிமைகளை அரசு வழங்கி வருகிறது. அதை இதுபோல் சிலர் தவறாக பயன்படுத்துவதாக நீண்ட காலமாக புகார் இருக்கிறது

அதை உறுதி செய்யும் வகையில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பை( MBC )சேர்ந்த திமுக 108அ வது வட்ட துணைச் செயலாளர் சி.டி.சுரேஷ் என்பவர் ஆதிதிராவிடர் என போலியாக சாதி சான்றிதழ் பெற்று இவரது குடும்பத்தினர்கள் அரசின் மூலம் உதவி தொகை உள்ளிட்ட சலுகைகள் பெறுவது தெரியவந்துள்ளது. சாமானியர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டிய திமுக ஆட்சி பொறுப்பில் இருக்கும் கட்சியின் நிர்வாகியே தவறான முன்னுதாரணமாக மாறியிருப்பதாக மக்கள் ஆதங்கப்படுகின்றனர் திமுக தலைமை விசாரித்து இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று இந்த பகுதி மக்கள் வலியுறுத்துகின்றனர்.

## மகளிர் உரிமைத் தொகை: மக்களுடன் முதல்வர் முகாமில் விண்ணப்பிக்கலாம் - அமைச்சர் கீதாஜீவன்



தூத்துக்குடி, மே.1

தமிழகத்தில் குடும்பத் தலைவிகளுக்கு மாதம்தோறும் ரூ.1000 வழங்கும் மகளிர் உரிமைத்தொகை திட்டமானது சுமார் 1 கோடியே 34 லட்சம் பேருக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தின் கீழ் வரும் ஜூன் மாதம் 9000 கோரிக்கை முகாம்கள் நடைபெறும் எனவும், அப்போது மகளிர் உரிமைத்தொகை திட்டத்திற்காக தகுதியுள்ள மகளிர் விண்ணப்பிக்கலாம் என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் அறிவித்திருந்தார்.

தூத்துக்குடியில் அமைச்சர் கீதாஜீவன் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

வரும் ஜீன் மாதம் 4ஆம் தேதி மக்களுடன் முதல்வர் என்கிற முகாம்களில் விடுபட்டவர்கள் முறையான ஆவணங்களுடன் இம்முகாம்களில் விண்ணப்பித்தால், தகுதியின் அடிப்படையில் மகளிர் உரிமைத்தொகை விரைவில் வழங்கப்படும் என முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார். எனவே, மொத்தம் 9,000 முகாம்கள் தமிழகம் முழுவதும் நடைபெற இருக்கிறது.

அந்த முகாம்களுக்கு சென்று ஏற்கனவே திட்டத்திற்கு விண்ணப்பம் செய்து நிராகரிக்கப்பட்டவர்கள் மீண்டும் விண்ணப்பம் செய்து கொள்ளலாம். அதைப்போலவிண்ணப்பம் செய்யாமல் இருந்த பெண்கள், தகுதியுள்ள பெண்கள் விண்ணப்பம் செய்துகொள்ளலாம். தகுதியுள்ள பெண்கள், விண்ணப்பிக்க நேரம் கொடுக்கப்பட்டுள்ளது என்றார்.

## 93 ஆண்டுகளுக்கு பிறகு சாதிவாரி கணக்கெடுப்பு: மத்திய அரசுக்கு நன்றி டி.டி.வி. தினகரன்



சென்னை, மே.1

சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கு பல்வேறு கட்சித் தலைவர்கள் மத்திய அரசுக்கு பாராட்டு தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த ஒப்புதல் அளித்துள்ள மத்திய அரசுக்கு அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் நன்றி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் இன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில், அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது சாதிவாரியாக கணக்கெடுப்பை நடத்துவதற்கான ஒப்புதலை வழங்கியிருப்பது வரவேற்புக்குரியது.

மக்கள் அனைவரின் சமூக, கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார நிலைகளை மேம்படுத்துவதற்கு தேவையான

திட்டங்களைவகுத்து அதனை செயல்படுத்துவதற்கு அடிப்படையான சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பைநடத்த வேண்டும் என அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் உட்பட பல்வேறு தரப்பினர் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நேரத்தில், தமிழ்நாட்டில் பின்பற்றப்படும் 69 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளில் புள்ளி விவரங்களுடன் கூடிய வலுவான வாதங்களை முன்வைப்பதற்கு உதவக்கூடிய சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை நாடு முழுவதும் நடத்த முடிவு செய்திருக்கும் மத்திய அரசுக்கு எனது மனமார்ந்த நன்றியை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகளுக்கு பதியமிடுதலுக்கான பயிற்சி



திப்பக்காபட்டி, பிஜிபி கல்லூரி மாணவிகளின் கிராபப்புற பயிற்சியில் விவசாயிகளுக்கு பயனுள்ள வகையாக பழச்செடிகளுக்கு பதியமுடுதல் பயிற்சி அளித்தனர். பல விவசாயிகள் பங்கேற்றனர். மேலும் செடிகள் உற்பத்தியில் பதியமிரடுதல் முக்கியமான பங்காற்றுகிறது. மேலும் பதியாமிடுதல் மூலம் விரைவாக பழங்ககளை அறுவடை செய்ய இது எளிய வழி என மாணவிகள் எடுத்துரைத்தனர். மேலும் அதற்கான கரைசல்கள் வேளாண் மாணவிகள் தயாரித்து விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றனர். பதியமைடுதல் என்பது ஒன்று முதல் இரண்டு மாதங்களில் வேரூன்றி செடியாக மாறுகிறது.



# செங்குன்றத்தில் 10 கிலோ கஞ்சா கடத்திய வாலிபர் கைது

திருவள்ளூர், மே.1

ஆந்திரா மாநிலத்தில் இருந்து செங்குன்றம் வழியாக கஞ்சா கடத்தப்படுவதாக செங்குன்றம் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து செங்குன்றம் போலீசார் அப்பகுதியில் வாகன



சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது ஆந்திராவில் இருந்து செங்குன்றம் நோக்கி சென்ற லாரியில் இருந்து இறங்கி நடந்து சென்ற வாலிபரிடம் சோதனை செய்தனர். அவர் பையில் 10 கிலோ கஞ்சா கடத்தி வந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

விசாரணையில் அவர் திண்டுக்கல் மாவட்டம் பழைய ஆழ்குடி முதலியார் தெருவைச் சேர்ந்த காளீஸ்வரன் என தெரிய வந்தது. இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் அவரை கைது செய்தனர்.

# நெல்லையில் அரசு பஸ்களில் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை மூலம் டிக்கெட் எடுக்கும் முறை அமலுக்கு வந்தது

நெல்லை, மே.1

தமிழ்நாடு அரசு போக்குவரத்து சேவையில் பணபரிவர்த்தனையை நவீனமயமாக்கும் வகையில் பயணிகளின் வசதிக்காக மின்னணுடிக்கெட்எந்திரங்கள் கொண்டு வரப்பட்டன. சென்னையில் சில ஆண்டுகளுக்கு முன்பு சோதனையில் முறையில் இந்த எந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.

அதன் வெற்றிக்கு பின்னர் தற்போது மாநிலம் முழுவதும் அரசு பஸ்களில் மின்னணு டிக்கெட் எந்திரங்கள் மூலம் டிக்கெட் வழங்கப்பட்டு வருகிறது. இந்த எந்திரங்கள் மூலம் பயணிகளுக்கு விரைவில் டிக்கெட் வழங்கமுடியும். இதனால் காலதாமதம் ஏற்படாது. இதற்கு முன்பு நடத்துனர்கள் தங்கள் கைகளில் பல வண்ணங்களில் டிக்கெட்டுகளை வைத்துக்கொண்டு கூட்ட நெரிசலில்சிரமத்துடன் டிக்கெட் வழங்கி வந்தனர்.




தற்போது இந்த மின்னணு எந்திரம் அந்த சிரமத்தைகுறைத்துள்ளது. இந்த எந்திரங்களில் பல்வேறு சிறப்பு அம்சங்கள் உள்ளன. ரொக்க பணம் இல்லாமல் பஸ்சில் ஏறும் பயணிகள் இந்த எந்திரங்களில் டெபிட் கார்டு, கிரெடிட் கார்டுகளை பயன்படுத்தியும், ஜிபே, போன்பே போன்ற செயலிகள் மூலம் கியூஆர் கோடை ஸ்கேன் செய்து பணம் செலுத்தி டிக்கெட் பெறலாம். ஆனால் சில தொழில்நுட்ப பிரச்சினைகள் காரணமாக இந்த சிறப்பு அம்சங்கள் பயன்படுத்தப்படாமல் இருந்தது. தற்போது அந்த பிரச்சினைகளை சரி செய்து உள்ளனர்.

இதையடுத்து நெல்லை அரசு போக்குவரத்து கழகம் சார்பில்அனைத்து பஸ்களிலும் இந்த டிஜிட்டல் பணபரிவர்த்தனை டிக்கெட் வழங்கும் பணி அமலுக்கு வந்துள்ளது. இதை பயணிகளுக்கு தெரிவிக்கும் வகையில், பஸ்களின் முன்பக்க கண்ணாடியில் "இப்பேருந்தில் டிஜிட்டல் பரிவர்த்தனை மூலம் பயணச்சீட்டு பெற்றுக் கொள்ளலாம்" என்று ஸ்டிக்கர் ஒட்டி உள்ளனர்.

இதுகுறித்து நெல்லை அரசு போக்குவரத்து கழக அதிகாரிகள் கூறுகையில், "மக்கள் டிஜிட்டல் பணபரிவர்த்தனையை தற்போது எளிதாக கையாண்டு வருகிறார்கள்.எனவேஅனைத்து அரசு பஸ்களிலும் டிக்கெட்டுக்கு உரிய கட்டணத்தை டிஜிட்டல் பரிவர்த்தனை மூலம் செலுத்தும்வசதி கொண்டு வரப்பட்டு உள்ளது.

இணையதள வசதி கிடைக்காமல் சர்வர் பிரச்சினை ஏற்பட்டால், வழக்கம் போல் டிக்கெட் வழங்கப்படும். கண்டக்டர்கள் அதற்கு தேவையான டிக்கெட்டுகளை தயார் நிலையில் வைத்திருப்பார்கள். இதை பயணியே முடிவு செய்து கொள்ளலாம். இதன் மூலம் சில்லரை பிரச்சினை இனிமேல் ஏற்படாது" என்றனர்.

# பெண்கள் பாதுகாப்புக்கு களம் இறங்கும் ரோபோ போலீஸ் என்னென்ன வசதிகள்?




சென்னை, மே.1

நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு சென்னை போலீஸ்துறையும் புது, புது தொழில்நுட்பங்களை புகுத்தி வருகிறது. இதில் ஒரு மகுடமாக பெண்கள் பாதுகாப்புக்கு 'ரோபோ' போலீஸ் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

இது தொடர்பாக சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை போலீஸ் கமிஷனர் அருண் உத்தரவின் பேரில் பெண்கள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புக்காக பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களிலும், பெண்கள், குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் சென்று வரும் பொது இடங்கள், சில குற்ற நிகழ்வு இடங்களிலும் அவசர காவல் உதவிக்காக, பாதுகாப்பை மேம்படுத்தும் விதமாக 'ரெட் பட்டன் ரோபோட்டிக் காப்" (ரோபோ போலீஸ்) அறிமுகம் செய்யப்பட இருக்கிறது.

இந்த பாதுகாப்பு சாதனத்தில் 24 மணி நேரமும் 360 டிகிரியில் பல மீட்டர் தூரதுல்லிய கண்காணிப்பு பதிவுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நேரடி காணொளி காட்சி பதிவு, குரல் தொடர்பு பதிவுகள், போலீஸ் துறையுடன் ஆபத்தில் உள்ள பொதுமக்கள்உரையாடும் வசதி, அவசர அழைப்பு எச்சரிக்கை ஒலி வசதி, உயர் தர நவீன வீடியோ கேமரா மற்றும் மைக்ரோபோன் வசதி, ஜி.பி.எஸ். வசதி, மக்கள் எந்த இடத்தில் இருந்தாலும்

ஒரு அழைப்பிற்கு உதவிடும் விரைவான நடவடிக்கைகள், உயிர் காக்கும் செயல்பாடுகளுடன் தகுந்த திறன் பயிற்சியுடன் கூடிய போலீஸ்துறையினர் மூலம் கண்காணிப்பு நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த சாதனத்தில் உள்ளஒருசிவப்புநிற பொத்தானை ஆபத்தில் இருக்கும் நபரோ அல்லது அவருக்காக மற்றொரு நபரோ அழுத்துவதன் மூலம் உடனடியாக காவல்துறைக்கு அழைப்பு வரும். அருகில் உள்ளவர்களுக்கு ஒலி எழுப்பி எச்சரிக்கை சப்தம் ஏற்படுத்தி உதவும். ஆபத்தில்உள்ளவருக்குவீடியோ கால் மூலம் நேரடியாக போலீஸ் கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொள்ள முடியும்.

ரோந்து போலீஸ் வாகனங்கள் வீடியோ கால் அழைப்பு மூலம் நிகழ்வுகளை கண்காணித்து உடனடியாக அவ்விடத்திற்கு விரைந்து வந்தடைந்து உரிய நடவடிக்கை எடுத்திடவும். கேமரா பதிவுகள் மூலம் நிகழ்வுகளை கொண்டு புலன் விசாரணையை தொடங்கி நடவடிக்கை எடுக்கும் வகையிலும் தொழில்நுட்ப வசதிகள் இடம் பெற்றுள்ளன.

சென்னை போலீஸ் எல்லையில் உள்ள 12 காவல் மாவட்டங்கள் கொண்ட 4 மண்டலங்களில் தலா 50 இடங்களில் மொத்தம் 200 போலீஸ் ரோபோ சாதனத்தை நிறுவிட போலீஸ் அதிகாரிகள் மூலம் கள ஆய்வு நடத்தி விபரங்கள் பெறப்பட்டுள்ளது.

சென்னையில் ரெயில், பஸ் நிலையங்கள், வணிக வளாகங்கள், வழிபாட்டு தலங்கள், கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள், ஐ.டி. நிறுவனங்கள், பூங்காக்கள், ஆஸ்பத்திரிகள் உள்ளிட்ட பகுதிகளில் மக்கள் வந்து செல்லும் இடங்களில் கண்காணிப்புக்காக போலீஸ் ரோபோ சாதனங்கள் வருகிற ஜூன் மாதம் முதல் நிறுவப்பட உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழக அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு



சென்னை, மே.1

சட்டசபையில் நேற்று முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், அரசு ஊழியர்களுக்கு 2 சதவீதம் அகவிலைப்படி உயர்வு உள்பட 9 அறிவிப்புகளை வெளியிட்டார். இதற்கு பல்வேறு தரப்பினரும் வரவேற்பு தெரிவித்துள்ளனர். இதுகுறித்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் சண்முகம் வெளியிட்டுள்ளஅறிக்கையில் கூறியிருப்பதாவது:

"அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில்முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் 9 அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். இதை வரவேற்கிறோம். பல ஆண்டுகளாக போராடி வரும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு இது நம்பிக்கை அளிக்கும். அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் பறிக்கப்பட்ட பயன்கள் அனைத்தையும் தமிழக அரசு மீட்டுத் தருகிறது.

இதேபோல சத்துணவு ஊழியர்களின் காலவரைமுறை ஊதியம், சாலைப் பணியாளர்களின் போராட்ட காலத்தை பணிக் காலமாக வரைமுறைப்படுத்துதல், காலிப் பணியிடங்களை நிரப்புதல், பழைய ஓய்வூதிய திட்டம், போக்குவரத்து ஓய்வூதியர் அகவிலைப்படி பிரச்சினை ஆகியவற்றை அரசு நிறைவேற்ற வேண்டும்."

இவ்வாறு அவர் கூறியுள்ளார். இதேபோல, தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கம், தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர் கழகம் ஆகிய அமைப்புகள் சார்பில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றியை தெரிவித்துள்ளனர்.

# போலீஸ் நிலையத்திற்குள் நுழைந்து காவலரை அலறவிட்ட சிறுத்தை! அதிர்ச்சி வீடியோ




நீலகிரி, மே.1

நீலகிரி மாவட்டம் கூடலூர் ஊட்டி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள நடுவட்டம் பஜாருக்குள் நேற்றிரவு 8.30 மணிக்கு சிறுத்தை ஒன்று நுழைந்தது. இரவு நேரம் என்பதால் புதர்களுக்குள் பதுங்கியவாறு வந்த சிறுத்தை பஜாரில் இருந்த போலீஸ் நிலையத்திற்குள் நுழைந்தது. அப்போது நுழைவு வாயில் அறைக்குள் நுழைந்த சிறுத்தை இன்ஸ்பெக்டர் அமர்ந்து இருக்கும் அறையை சுற்றி பார்த்தது.

இந்த சமயத்தில் மற்றொரு அறைக்குள் போலீஸ் ஏட்டு ஒருவர் அமர்ந்து பணியாற்றிக் கொண்டிருந்தார். அப்போது சிறுத்தை புலி அறைக்குள் வந்திருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். மேலும் அச்சத்தில் உறைந்து போய் சத்தம் போட முடியாத நிலையில் இருந்தார்.

பின்னர் அறைக்குள் சாப்பிடுவதற்கு ஒன்றுமில்லை என உணர்ந்த சிறுத்தை புலி வந்த வழியாக வாசற்படிக்கட்டுகளில் இறங்கி வெளியே சென்றது. இதை அறையில் கதவு வழியாக எட்டிப் பார்த்த போலீஸ் ஏட்டு சிறுத்தை வெளியே சென்றதை உறுதி செய்தவுடன் மெதுவாக வந்து நுழைவாயில் கதவை பூட்டினார்.

அதன் பின்னரே அவர் நிம்மதி அடைந்தார்.

தொடர்ந்து சிறுத்தை போலீஸ் நிலையத்துக்குள் வந்ததால் உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. மேலும் நடுவட்டம் வனத்துறையினரும் அப்பகுதிக்கு வந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இந்த சம்பவம் போலீசார் மத்தியில் பீதியையும், பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது. இந்த சம்பவம் அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்களில் பதிவாகியுள்ளது.

இதேபோல் போலீஸ் நிலையத்திற்கு சிறுத்தை வந்து சென்ற விவரம் அறிந்த பொதுமக்கள் அப்பகுதியில் திரண்டனர். தொடர்ந்துகூண்டுவைத்து சிறுத்தையை பிடிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மதுரை மீனாட்சி அம்மன் திருக்கல்யாணம்.. கட்டண சீட்டு முன்பதிவு தொடக்கம்



மதுரை, மே.1

மீனாட்சி அம்மன் திருக்கல்யாணத்தை நேரில் காண ரூ.200, ரூ.500 கட்டண சீட்டுகள் முன்பதிவு இன்று (29ந் தேதி) தொடங்கி வருகிற 2ந் தேதி வரை நடக்கிறது.

கோவில் இணையதளமான *maduraimeenakshi.hrce.tn.gov.in* மற்றும் இந்து சமய அறநிலையத்துறை இணையதளமான *hrce.tn.gov.in* ஆகியவற்றில் இன்று முதல் மே2 ந் தேதி இரவு 9 மணி வரை இந்த வசதி ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

மேற்கு சித்திரை வீதி பிர்லா விஷ்ரம் தங்கும் விடுதியில் ரூ.500, ரூ.200 கட்டண சீட்டை இன்று முதல் நேரில் வந்து பதிவு செய்து கொள்ளலாம். ஆதார்நகல், போட்டோவுடன் கூடிய அடையாள அட்டை நகல், மொபைல் எண், இமெயில் முகவரி அவசியம். அதிக முன்பதிவுகள் செய்யப்பட்டால் குலுக்கல் முறையில் தேர்வு செய்து மொபைல் மற்றும் இமெயிலில் மே 3ந் தேதி அன்று தகவல் தெரிவிக்கப்படும்.

சம்பந்தப்பட்டோர் மே 4ந் தேதி முதல் 6ந் தேதி வரை காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை பிர்லா விஷ்ரம் தங்கும் விடுதியில் தங்களுக்கு வந்த எஸ்.எம்.எஸ்., இமெயிலை காண்பித்து பணம் செலுத்தி திருக்கல்யாண கட்டண சீட்டை பெறலாம். ஒருவர் இரண்டு ரூ.500 கட்டண சீட்டை மட்டுமே பெற முடியும்.

ரூ.200 கட்டண சீட்டை ஒருவர் 3 பெறலாம். ஒரே நபர் ரூ.500, ரூ.200 கட்டணசீட்டை பெற முடியாது. பிறந்த தேதியை சரியாக பூர்த்தி செய்து இருக்க வேண்டும். ஒரு பதிவுக்கு ஒரு மொபைல் எண் மட்டுமே பயன்படுத்த முடியும் என்று கோவில் நிர்வாகம் அறிவுறுத்தி உள்ளது.

# குடும்ப பிரச்சினை... கணவனால் தீ வைத்து கொளுத்தப்பட்ட இளம்பெண் உயிரிழப்பு



கடலூர், மே1.

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் அருகே உள்ள மேலபழஞ்சநல்லூரை சேர்ந்தவர் அய்யப்பன் மகன் விக்னேஷ் (வயது 25). இவர் ஆயில் மில் வைத்து நடத்தி வருகிறார். இவருக்கும், சினேகா (24) என்பவருக்கும்கடந்த 10 மாதங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது.

இந்த நிலையில் குடும்ப பிரச்சினை காரணமாக கணவன் மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்ததாக தெரிகிறது. சம்பவத்தன்று ஏற்பட்ட தகராறில் ஆத்திரமடைந்த விக்னேஷ் தன் மனைவி மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீவைத்துகொளுத்தி விட்டதாக கூறப்படுகிறது.

இதில் உடல் முழுவதும் தீப்பற்றி எரிந்ததில் அவர், வலியால் அலறி துடித்தார். அப்போது அருகில் நின்ற விக்னேசுக்கும் தீக்காயம் ஏற்பட்டதாக தெரிகிறது. இதையடுத்து தீயில் படுகாயம் அடைந்த சினேகா சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதனிடையே தீக்காயம் அடைந்த விக்னேஷ் சிகிச்சைக்காக சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இது குறித்த புகாரின் பேரில் காட்டுமன்னார் கோவில் போலீசார் விக்னேஷ் மீது கொலை முயற்சி பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இந்த நிலையில் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சினேகா நேற்று பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.

இதையடுத்து கொலை முயற்சி வழக்கை கொலை வழக்காக மாற்றிப்பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கோவில்பட்டியில் விற்பனைக்காக 23 கிலோ கஞ்சா வைத்திருந்த 4 பேர் கைது



தூத்துக்குடி, மே.1

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் உத்தரவின்படி, கோவில்பட்டி உட்கோட்ட டி.எஸ்.பி. ஜெகநாதன் மேற்பார்வையில், கோவில்பட்டி கிழக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜின்னா பீர்முகமது தலைமையில் சப்இன்ஸ்பெக்டர் செந்தில்வேல்முருகன் மற்றும் போலீசார் நேற்று முன்தினம் (27.04.2025) கோவில்பட்டி அருகே மூப்பன்பட்டி சுடுகாட்டு பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது அங்கு சந்தேகப்படும்படி இருந்த ஒரு காரை சோதனை செய்தனர். அதில் கோவில்பட்டி கழுகாசலபுரம் பகுதியைச் சேர்ந்த உதயகுமார் மகன் அருண்குமார் (வயது 23), கயத்தாறு நாகலாபுரம் பகுதியைச் சேர்ந்த முருகன் மகன் கொம்பையாபாண்டியன் (21), கயத்தாறு தெற்கு கோனார் கோட்டை பகுதியைச் சேர்ந்த தங்கராஜ் மகன் மகாராஜா (19) மற்றும் கோவில்பட்டி வ.உ.சி. நகரைச் சேர்ந்த குருநாதன் மகன் கார்த்திக் (20) ஆகியோர் இருந்ததும், அவர்கள் விற்பனைக்காக காரில் கஞ்சா வைத்திருந்ததும் தெரியவந்தது.

உடனடியாக போலீசார் மேற்சொன்ன 4 பேரையும் கைது செய்து அவர்களிடமிருந்து 23 கிலோ 720 கிராம் கஞ்சா, ஒரு கார் மற்றும் 3 செல்போன்கள் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

மேலும் இதுகுறித்து கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# போதையின் பாதையில் திமுக யாரையும் கூட்டிச் செல்ல வேண்டாம்: அதிமுக வலியுறுத்தல்



சென்னை, மே.1

அதிமுக தலைமை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய மரணங்களின் சுவடுகள் நம்மை விட்டு கொஞ்சமும் நீங்கவில்லை. அதற்குள், அதே மாவட்டத்தில் உள்ள ரிஷிவந்தியத்தில் திமுக இளைஞரணி கூட்டத்தில் "பீர்" மதுபானம் பரிமாறப்பட்டதற்கு, "போதையின் பாதையில் யாரும் செல்ல வேண்டாம்" என்று விளம்பர வீடியோ வெளியிட்ட முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் என்ன பதில் சொல்லப் போகிறார்?.

அதுவும், ரிஷிவந்தியம் திமுக சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன் ஏற்பாட்டில் தான் பீர் வழங்கப்பட்டதாகவே செய்திகள் வருகின்றன. திமுக எம்.எல்.ஏ.வுக்கும், திமுகவுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை" என்று சொல்லப் போகிறாரா ஸ்டாலின்?. தன் கட்சியின் அயலக அணி மாவட்ட பொறுப்பாளராக இருந்த ஜாபர் சாதிக், சர்வதேச போதைப்பொருள் மாபியா தலைவனாக செயல்பட்டு வந்தது பற்றியே இன்று வரை இந்த பொம்மை முதல் அமைச்சர் ஒரு வார்த்தை கூட வாய் திறக்கவில்லையே?.

திமுகவிற்கும் போதைப்பொருட்களுக்குமான தொடர்பையே விளக்க முடியாத இவரா, போதைப்பொருள் புழக்கத்தை ஒழிப்பார்? வாய்ப்பே இல்லை. முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்களே, போதையின் பாதையில் திமுக யாரையும் கூட்டிச்செல்ல வேண்டாம். போதைப்பொருள் புழக்கம் ஒழிய, இந்த திமுக ஆட்சி முடிவுக்கு வந்து, அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுகவின் நல்லாட்சி அமைவதே ஒரே வழி. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நெல்லை: சாலையில் நடந்து சென்றவரை பணம் கேட்டு மிரட்டிய வாலிபர் கைது




திருநெல்வேலி மே1

திருநெல்வேலி மாநகரம், சிந்துபூந்துறை நாடார் சங்கம் அருகே நேற்று முன்தினம் (27.04.2025) சந்திப்பு மேகலிங்கபுரம்அண்ணா நகரைச் சேர்ந்த குற்றாலிங்கதேவர் மகன் கஜேந்திரன் (வயது 52) நடந்து சென்றுள்ளார். அப்போது அவரை வழிமறித்த விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் பகுதியைச் சேர்ந்த முருகன் மகன் மாரிமுத்து (23), கஜேந்திரனுடைய சட்டைப் பையில் இருந்து பணத்தை எடுக்க முயற்சித்ததோடு மிரட்டல் விடுத்துள்ளார். இது குறித்து கஜேந்திரன் கொடுத்த புகாரின்பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து மாரிமுத்துவை கைது செய்து விசாரணை செய்தனர்.

# நெல்லையில் தந்தையை கட்டையால் தாக்கிய மகன் கைது

திருநெல்வேலி மே.1

திருநெல்வேலி மாநகரம், மேலப்பாளையம், குறிச்சி, அழகிரிபுரம் பகுதியைச் சேர்ந்த முருகன் தினந்தோறும் குடிபோதையில் வீட்டிற்கு வந்து தகராறு செய்துள்ளார்.

இந்த நிலையில் குடிபோதையில் தகராறு செய்த தனது தந்தை முருகனை மகனான ராஜசெல்வம் (வயது 27) தட்டிக் கேட்டுள்ளார்.

அப்போது தந்தைக்கும் மகனுக்கும் ஏற்பட்ட தகராறில் தந்தையை கட்டையால் தாக்கியதாகவும் தடுக்கச் சென்ற தன்னையும் தாக்கி காயம் ஏற்படுத்தியதாக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த முருகனின் மனைவியான சமுத்திரக்கனி (54) கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து ராஜசெல்வத்தை போலீசார் கைது செய்து விசாரணை செய்தனர்.

## பிரேக்குக்கு பதில் ஆக்சிலேட்டரை மிதித்ததால் விபத்து.. பள்ளத்தில் கார் கவிழ்ந்து தாய், மகள் படுகாயம்



கோவை, மே.1

கோவை மாவட்டம் சூலூரைச் சேர்ந்த ஸ்ரீநிவேதா, தனது தாயார் வாணியுடன் கார் ஒன்றில் செஞ்சேரி மலை கோயிலுக்கு சென்றிருக்கிறார். அப்போது பார்க்கிங்கில் காரை நிறுத்த முயன்ற போது, எதிர்பாராதவிதமாக அவர் பிரேக்கிற்கு பதிலாக ஆக்சிலேட்டரை மதித்துள்ளார்.

இதனால் கார், அருகில் இருந்த 40 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதைக்கண்ட அப்பகுதியினர் விரைந்து வந்து, காரில் படுகாயங்களுடன் உயிருக்கு போராடிக்கொண்டிருந்த தாய், மகள் இருவரையும் மீட்டனர். தற்போது அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அங்கு இருவருக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வரும் நிலையில், போலீசார் இதுகுறித்து விசாரித்து வருகின்றனர்.

## நெல்லை: பெண் சப்இன்ஸ்பெக்டரை கத்தியால் குத்தியவருக்கு 5 ஆண்டுகள் சிறை

திருநெல்வேலி மே.1

நெல்லை மாவட்டம், சுத்தமல்லி காவல் நிலையத்தில் பணிபுரிந்த பெண் சப் இன்ஸ்பெக்டர் 23.04.2022 அன்று பழவூர் கோவில் திருவிழா பாதுகாப்பு பணியில் இருந்தார். அப்போது அங்கு வந்த பழவூர், பால் பண்ணை தெருவைச் சேர்ந்த ஆறுமுகம்(எ)படையப்பா(வயது 44) அந்த சப்இன்ஸ்பெக்டரிடம் தகராறில் ஈடுபட்டு அவதூறாக பேசி கத்தியால் தாக்கி ரத்தக்காயம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்து சென்றுள்ளார். இதுகுறித்து சுத்தமல்லி காவல் துறையினர் கொலை முயற்சி வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு ஆறுமுகம்(எ) படையப்பாவை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இவ்வழக்கு விசாரணை திருநெல்வேலி மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த நிலையில் நேற்று (28.04.2025) இவ்வழக்கை விசாரித்த நீதிபதி பன்னீர்செல்வம் தீர்ப்பு வழங்கினார். அதில் அவர் ஆறுமுகம்(எ) படையப்பாவுக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.13,500 அபராதம் விதித்து உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் நிறம்பட புலன் விசாரணை செய்து சாட்சிகளை விரைவாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்றுக் கொடுத்த சேரன்மகாதேவி உட்கோட்ட டி.எஸ்.பி. சத்யராஜ், சுத்தமல்லி காவல் துறையினர் மற்றும் திறம்பட வாதிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் ஜெயபிரபா ஆகியோரை திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பாராட்டினார்.

திருநெல்வேலி மாவட்ட காவல் துறையின் துரித நடவடிக்கையால் 2025ம் ஆண்டில் மட்டும் இதுவரை 12 கொலை வழக்குகளில் ஈடுபட்ட ஒருவருக்கு மரண தண்டனையும், 41 குற்றவாளிகளுக்கு (14 சரித்திர பதிவேடு குற்றவாளிகள் உட்பட) ஆயுள் தண்டனையும், 9 கொலை முயற்சி வழக்குகளில் ஈடுபட்ட 13 குற்றவாளிகளுக்கு (5 முதல் 12 ஆண்டுகள் வரை) சிறை தண்டனையும் சம்பந்தப்பட்ட நீதிபதிகள் வழங்கியுள்ளனர் என்பதுகுறிப்பிடத்தக்கது.

## மதுரை: கொலை வழக்கு குற்றவாளிகள் 2 பேருக்கு ஆயுள் தண்டனை




மதுரை மே.1

மதுரை மாநகர், திருநகர் காவல்நிலைய சரகத்திற்கு உட்பட்ட ஒனக்கல் சௌராஸ்டிரா சொசைட்டிக்கு பின்புறம் செளபாக்யா நகரைச் சேர்ந்த அப்துல்அஜீஸ் மகன் பாஷித்அஹமது (வயது 30) என்பவரை அந்த பகுதியில் நடந்த ஆடலுடன் பாடல் நிகழ்ச்சியின்போது ஏற்பட்ட முன்பகை காரணமாக, மதுரை விளாச்சேரியை சேர்ந்த ரவி மகன் ராஜேஷ் (30) மற்றும் சந்திரன் மகன் விஸ்வா (18) ஆகியோர் சேர்ந்து கொலை செய்துள்ளனர். இதுசம்பந்தமாக திருநகர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து குற்றவாளிகள் 2 பேரும் கைது செய்யப்பட்டு, குற்ற பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கு விசாரணை மதுரை மாவட்ட 5வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த நிலையில் நேற்று (28.04.2025) இவ்வழக்கில் சாட்சிகள் விசாரணை முடிவுற்று நீதிபதி ஜோஸ்வாராய் தீர்ப்பு வழங்கினார். அதில் அவர் குற்றவாளிகள் ராஜேஷ், விஷ்வா ஆகிய 2 பேருக்கும் ஆயுள் தண்டனை மற்றும் தலா ரூ.5 ஆயிரம் அபராதம் விதித்து உத்தரவிட்டார். இவ்வழக்கில் சிறப்பாக செயல்பட்ட திருநகர காவல் துறையினரை மதுரை மாநகர போலீஸ் கமிஷனர் பாராட்டினார்.

## எஸ்.பி.வேலுமணி மகன் விகாஸ் தீக்ஷனா தம்பதிக்கு ரஜினி நேரில் வாழ்த்து



சென்னை, மே.1

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணியின் மகன் விஜய்விகாஸ் திருமணம் கடந்த மார்ச் 3 ஆம் தேதி மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. நடிகர் ரஜினிகாந்தை, எஸ்.பி. வேலுமணி நேரில் சந்தித்து தனது மகன் திருமணத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்து அழைப்பிதழை வழங்கினார்.

ஆனால் படப்பிடிப்பு காரணமாக ரஜினிகாந்தால் திருமணத்தில் பங்கேற்க முடியவில்லை. இந்த நிலையில் , இன்று எஸ்.பி. வேலுமணி வீட்டிற்கு சென்று மகன் விகாஸ் தீக்ஷனா தம்பதிக்கு ரஜினி வாழ்த்துக்களை தெரிவித்தார் .

## நெல்லை: பீடி நிறுவனத்தில் வருமான வரித்துறையினர் சோதனை



திருநெல்வேலி மே1

நெல்லையில் பல்வேறு பீடி நிறுவனங்கள் உள்ளன. இந்நிலையில், நெல்லை டவுனில் பிரபல காஜா பீடி நிறுவனம் உள்ளது. இந்த நிறுவனத்தில் இன்று வருமான வரித்துறை அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர். மத்திய பாதுகாப்புப்படையினர் உதவியுடன் வருமான வரித்துறை அதிகாரிகள் இந்த சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். வரி ஏய்ப்பு புகாரில் இந்த சோதனை நடைபெற்று வருவதாகதகவல் வெளியாகியுள்ளது. இந்த சோதனையால்நெல்லை டவுனில் பரபரப்பான சூழ்நிலை காணப்படுகிறது.

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநில செயலாளர் உதயநிதியுடன் சந்திப்பு



சென்னை, மே.1

துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

கேரள மாநிலத்தின் வருவாய் மற்றும் வீட்டுவசதித்துறை மந்திரி கே.ராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநில செயலாளர் பினோய் விஸ்வம் மற்றும் அக்கட்சியின் தமிழ் மாநில செயலாளர் அண்ணன் முத்தரசன் ஆகியோர் தலைமைச் செயலகத்தில் இன்று நம்மை மரியாதை நிமித்தமாக சந்தித்தார்கள்.

கேரளத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பாசிச எதிர்ப்பு மாநாடு தொடர்பாக எடுத்துரைத்து, அதில் நாம் பங்கேற்க வேண்டுமென்று அழைப்பு விடுத்தார்கள். என தெரிவித்துள்ளார் .

## சென்னை ஐகோர்ட்டுக்கு மே 1 முதல் கோடை விடுமுறை



சென்னை, மே.1

சென்னை ஐகோர்ட்டுக்கு வரும் மே 1 முதல் ஜூன் 1 வரை கோடை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது .அவசரகால வழக்குகளை விசாரிக்க நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்

நீதிபதிகள்மாலா, அருள் முருகன், விக்டோரியா கௌரி ஆகியோர் மே 7, 8 தேதிகளில் அவசர வழக்குகளை விசாரிப்பார்கள்.

நீதிபதிகள் சுவாமிநாதன், லட்சுமி நாராயணன், நிர்மல் குமார் ஆகியோர் மே 14, 15, 21 மற்றும் 22 ஆகிய தேதிகளிலும், நீதிபதிகள் செந்தில் குமார் ராமமூர்த்தி, சத்திய நாராயணா பிரசாத், திலகவதி ஆகியோர் மே 28, 29 ஆகிய தேதிகளிலும் விசாரிப்பார்கள்.

## மே 1 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அட்டவணையில் சென்னை புறநகர் மின்சார ரெயில் சேவை



( வியாழக்கிழமை )

சென்னை, மே.1

சென்னையில் வசித்து வரும் பொதுமக்களுக்கு மிக முக்கிய பொது போக்குவரத்து சேவையாக சென்னை புறநகர் மின்சார ரெயில் சேவை இருந்து வருகிறது. சென்னை கடற்கரைதாம்பரம், சென்னை கடற்கரை செங்கல்பட்டு, வழித்தடங்களில் நாள் தோறும் மின்சார ரெயில் சேவைகள் இயக்கப்படுகிறது.

இந்த நிலையில் மே 1ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அட்டவணையில் சென்னை புறநகர் மின்சார ரெயில் சேவை இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே 1ஆம் தேதி உழைப்பாளர்தினம் ஆகும். உழைப்பாளர் தினம் தேசிய விடுமுறை தினமாகும். தேசிய விடுமுறையை முன்னிட்டு அன்றைய தினம் சென்னை புறநகர் மின்சார ரெயில்கள் ஞாயிற்றுக்கிழமை அட்டவணைப்படி இயங்கும் .

## பொள்ளாச்சி பாலியல் வழக்கில் திட்டமிட்டபடி 13ந்தேதி தீர்ப்பு



கோவை, மே.1

கோவை மாவட்டம், பொள்ளாச்சியில், கல்லூரி மாணவி மற்றும் பெண்கள் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்து, ஆபாச வீடியோ எடுத்து துன்புறுத்தப்பட்டனர். இது தொடர்பானவீடியோ வெளியானதால், 2019ல் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பொள்ளாச்சி கிழக்கு பகுதி போலீசார் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்து விசாரித்தனர். சி.பி.சி.ஐ.டி., விசாரித்த வழக்கு, பின் சி.பி.ஐ.,க்கு மாற்றப்பட்டது.

இவ்வாறு பல கட்டங்களாக நடைபெற்ற இந்த வழக்கில் சாட்சி விசாரணை, அரசு தரப்பு மற்றும் எதிர் தரப்பு இறுதிவாதம் முடிவடைந்த நிலையில், வழக்கின் தீர்ப்பு மே 13ல் அளிக்கப்படும் என நீதிபதி அறிவித்துள்ளார்.

இதற்கிடையே, தமிழகம் முழுவதும் 50க்கும் மேற்பட்ட நீதிபதிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதில், பொள்ளாச்சி பாலியல் வழக்கை விசாரித்து வந்த நீதிபதி நந்தினிதேவேியின் பெயரும் இடம்பெற்றுள்ளது. கரூர் மாவட்ட குடும்ப நல நீதிமன்ற நீதிபதியாக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். தமிழகம் முழுவதும் பொள்ளாச்சி பாலியல் வழக்கின் இறுதி தீர்ப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலையில், நீதிபதி நந்தினிதேவியின் பணியிட மாற்றம் பேசுபொருளாகியுள்ளது.

இந்த நிலையில், இந்த வழக்கில் திட்டமிட்டபடி 13ந்தேதி தீர்ப்பு வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பணியிட மாற்ற நடவடிக்கைக்கு சிறிது காலம் ஆகும் என்பதால், இந்த வழக்கை விசாரித்த நீதிபதி நந்தினி தேவி அந்த வழக்கில் தீர்ப்பை அறிவித்த பின்னரே கரூர் மாவட்ட நீதிமன்ற பணிக்கு செல்வார் எனதகவல் வெளியாகியுள்ளது.

## நெல்லை: கொலை வழக்கு குற்றவாளிகள் 3 பேருக்கு இரட்டை ஆயுள் தண்டனை

திருநெல்வேலி மே.1

திருநெல்வேலி மாநகரம், தச்சநல்லூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அழகநேரி, அம்மன்கோவில் வடக்குத் தெரு, முனியசாமி மகன் முருகன் என்பவருடைய சகோதரர் செந்தில் குமார் என்பவருக்கும் அதே பகுதியை சேர்ந்த சுடலை மகன் முருகன், சுப்பையா மகன் செந்தில்(எ) செந்தில்குமார் மற்றும் விஜயகுமார் ஆகியோருக்கு இடையே பன்றி வளர்ப்பது தொடர்பாக முன் பகை இருந்தது. அதன் காரணமாக 30.9.2018 அன்று தங்கம் மன்கோவில் அருகில் உள்ள படித்துறையில் அமர்ந்திருந்த செந்தில்குமாரை அவதூறாக பேசி, அரிவாளால் தாக்கி கொலை செய்துள்ளனர். இதுகுறித்து தச்சநல்லூர் காவல் துறையினர் கொலை வழக்கு பதிவு செய்து முருகன், மகேந்திரன், தங்கராஜ், முருகன், விஜயகுமார் ஆகியோரை கைது செய்து அவர்கள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தனர்.

இவ்வழக்கு விசாரணை திருநெல்வேலி 3வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த நிலையில் நேற்று (28.04.2025) நீதிபதி தீர்ப்பு வழங்கினார். அதில் குற்றவாளிகளான முருகன், விஜயகுமார், செந்தில்(எ) செந்தில்குமார் ஆகிய 3 பேருக்கு இரட்டை ஆயுள் தண்டனையும், முருகனுக்கு ரூ.2,500 அபராதம் மற்ற இருவருக்கு தலா ரூ.3,000 அபராதம் விதித்து உத்தரவிட்டார். மேலும் இவ்வழக்கில் தொடர்புடைய மற்ற இரண்டு குற்றவாளிகள் இறந்து விட்டனர்.

## எதிர்கட்சிகளை பழிவாங்குவதே அமலாக்கத்துறையின் நோக்கம் செல்வப்பெருந்தகை



சென்னை, மே.1

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;

"பா.ஜ.க. எப்பொழுதுமே காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சிகள் மீது ஆதாரமற்ற ஊழல் குற்றச்சாட்டுகளை கூறி வந்தது. அப்படி கூறப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகளில் ஒன்றுதான் 2010 இல் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டு போட்டிகள் குறித்ததாகும். ஊழல் குற்றச்சாட்டுகளை எழுப்பிய பிறகு, அதுகுறித்து அன்றைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு மத்திய புலனாய்வுத்துறை மூலம் விசாரணையை தொடங்கியது. காமன்வெல்த் விளையாட்டை பொறுத்தவரை, அதன் வரவேற்புக்குழு தலைவராக இருந்த சுரேஷ் கல்மாடி உள்ளிட்டவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, ஒப்பந்தங்கள் வழங்கியதில் மிகப்பெரிய முறைகேடுகளும், ஊழல்களும் நடந்ததாக எதிர்கட்சிகளால் குற்றச்சாட்டுகள் கூறப்பட்டது. இதற்கு ஊடகங்களில் மிகப்பெரிய முக்கியத்துவம் தரப்பட்டு, தேர்தல் அரசியலில் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக பயன்படுத்தப்பட்டது. அந்த குற்றச்சாட்டு குறித்து, மத்திய புலனாய்வுத்துறை விசாரித்து அதில் எந்த குற்றமும் நிகழவில்லை என்ற முடிவு அறிக்கையை ஏற்கனவே 2014 இல் சமர்ப்பித்தது.

அதற்கு பிறகு, 2016 இல் ஒன்றிய பா.ஜ.க. அரசின் அமலாக்கத்துறை சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச் சட்டத்தின் பிரிவு 3ன் கீழ் பண மோசடி மற்றும் பணபரிமாற்றம் நடைபெற்றதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது. ஆனால், அந்த முதல் தகவல் அறிக்கையின்படி, கடந்த 9 ஆண்டுகளில் எந்த குற்றச்சாட்டையும் நிரூபிக்க போதிய ஆவணங்களை திரட்ட முடியவில்லை என்று கூறி அமலாக்கத்துறையே தில்லி நீதிமன்றத்தில் சிறப்பு நீதிபதி சஞ்ஜீவ் அகர்வால் முன்னிலையில் நேற்று வழக்கை முடிக்க முடிவு அறிக்கையை சமர்ப்பித்தது. இதன்படி இனிமேல் இந்த வழக்கை தொடருவதில் எந்தவித காரணமும் இல்லை என்று முடிவு அறிக்கையை ஏற்றுக்கொள்ளும்படி நீதிமன்றத்தை கேட்டுக்கொண்டது. அதன்படி நீதிமன்றம்சுரேஷ் கல்மாடி உள்ளிட்டவர்கள் மீது கூறிய குற்றச்சாட்டுகளை நிரூபிக்க மத்திய புலனாய்வுத்துறை, அமலாக்கத்துறை தவறி விட்டதாகக் கூறி குற்றவாளிகள் அனைவரும் நிரபராதிகள் என தீர்ப்பு கூறி விடுவித்திருக்கிறது. இந்த தீர்ப்பு பா.ஜ.க.வின் அவதூறான ஊழல் அரசியலின் மீது மிகப்பெரிய சம்மட்டி அடியாக விழுந்திருக்கிறது. தமிழகத்தில் அமைச்சராக இருந்த செந்தில் பாலாஜி உள்ளிட்டவர்கள் மீது அமலாக்கத்துறை வழக்கு பதிவு செய்து பழிவாங்கும் நோக்கோடு செயல்பட்டு வருவதை அனைவரும் அறிவார்கள். இந்தப் பின்னணியில் அமலாக்கத்துறை பதிவு செய்கிற வழக்குகளில் 93 சதவிகிதம் எதிர்கட்சிகள் மீது தான் தொடுக்கப்படுகின்றன. இதில், தண்டனை விகிதம் 2 சதவிகிதம் கூட இல்லை என்பதை விட, அமலாக்கத்துறைக்கு அவமானம் வேறு எதுவும் இருக்க முடியாது. இதன் மூலம் அமலாக்கத்துறையின் நோக்கமே எதிர்கட்சிகளை பழிவாங்குவற்குத் தான் என்பதற்கு இதை விட வேறு சான்று தேவையில்லை.

மத்திய புலனாய்வுத்துறை, அமலாக்கத்துறை ஆகிய அமைப்புகளை பா.ஜ.க. கைப்பாவையாக வைத்துக் கொண்டு காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்கட்சிகளை அரசியல் ரீதியாக முடக்கி விடலாம் என முனைகிற நேரத்தில், தில்லி நீதிமன்றம் சுரேஷ் கல்மாடி உள்ளிட்டவர்களை நிரபராதிகள் என விடுவித்திருப்பதன் மூலம், டாக்டர் மன்மோகன்சிங் ஆட்சி மீது சுமத்தப்பட்ட அவதூறு குற்றச்சாட்டுகள் தவிடு பொடியாக்கப்பட்டிருக்கிறது. இந்த தீர்ப்பை தமிழ்நாடு காங்கிரஸ் சார்பாக வரவேற்கிறேன்."

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

## பாலியல் குற்றங்களை தடுக்க.. பள்ளிக்கல்வித்துறை வெளியிட்ட முக்கிய வழிமுறைகள் என்னென்ன..?




சென்னை, மே.1

அனைத்து வகை பள்ளிகளிலும் மாணவமாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் சூழலை ஏற்படுத்தும் வகையில் பள்ளிக்கல்வித் துறை சில நடவடிக்கைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தியுள்ளது.

அதன்படி, பள்ளிகள் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கல்வித் துறை வெளியிட்டுள்ள வழிமுறைகள் வருமாறு:

★ பாலியல் குற்றங்கள் நடக்காமல் இருக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அனைத்து ஆசிரியர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும் அடுத்த 6 மாத காலத்துக்குள் முறையான பயிற்சி அளித்தலை உறுதிசெய்திட வேண்டும். அதன் பின்னர் 6 மாதத்துக்கு ஒரு முறை புத்தாக்க பயிற்சி அளிக்க வேண்டும்.

★ மாணவிகள் பயணம் செய்யும் பள்ளி வாகனங்களில் பெண் உதவியாளர்கள் அமர்த்தப்பட வேண்டும். அதேபோல் விளையாட்டு போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், கல்வி சுற்றுலா போன்ற நிகழ்ச்சிகளுக்கு பெண் ஆசிரியர்களே மாணவிகளை அழைத்து செல்ல வேண்டும். தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித்திட்டம், சாரணசாரணியர் இயக்க முகாம்களில் மாணவிகளுடன் பெண் ஆசிரியர்கள் மட்டுமே தங்குவது உறுதி செய்யப்பட வேண்டும்.

★ விடுதிக்குள் வெளிநபர்களை அனுமதிக்கக் கூடாது. விடுதி பராமரிப்பு பணிகளுக்காக அனுமதிக்கப்படும் பணியாளர்கள், பெண் விடுதி காப்பாளர்கள் மேற்பார்வையில் மட்டுமே பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட வேண்டும்.

★ பாலியல் குற்றங்கள் பற்றி குழந்தைகள் புகார் அளித்தாலோ, பாலியல் குற்றங்கள் பற்றி தெரிய வந்தாலோ, அப்பள்ளியின் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் உடனடியாக போலீசாருக்கு புகார் அளிக்க வேண்டும். அவ்வாறு புகார் அளித்தவுடன் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலருக்கு அதுபற்றி தகவல் தெரிவிக்க வேண்டும். மாணவர் மனசு புகார் பெட்டி அனைத்து பள்ளிகளிலும் நிறுவப்பட்டு, அது தினசரி பயன்பாட்டில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். புகார் அளிக்கும் குழந்தைகளின் விவரங்களை வெளியிடக்கூடாது என்பதால், கண்காணிப்பு கேமராக்கள் இல்லாத இடத்தில் இந்த பெட்டியை வைக்க வேண்டும்.

★ கண்காணிப்பு கேமராக்கள் அனைத்து பள்ளிகளிலும் மாணவமாணவிகள் செல்லும் அறைகள், விளையாட்டு மைதானம், வகுப்பறை முகப்பு, உள்ளே வருவது மற்றும் வெளியே செல்வதற்கான வழிகள் மற்றும் பள்ளி வளாகங்களுக்குள் அமைத்திட வேண்டும்.

★ மகளிர் கழிவறைகளை பெண் பணியாளர்கள் மட்டுமே தூய்மைப் பணிகளை செய்ய அனுமதிக்க வேண்டும். அனைத்து வகையான ஆய்வகங்கள்,

நூலகங்கள் ஆகியவற்றில் எப்போதும் ஒரு பெண் ஆசிரியர், பணியாளர் இருக்கவேண்டும்.

★ ஆண் ஆசிரியர்கள், பணியாளர்கள் அறையில் குறிப்பாக பெண் குழந்தைகள் செல்வதை அனுமதிக்கக் கூடாது. இதனை கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

★ சிறப்பு வகுப்புகள் பள்ளி நேரமில்லாமல் நடத்தப்படும்போது, குறைவான மாணவர்கள் எண்ணிக்கை இருப்பதால், கண்காணிப்பதை கட்டாயமாக செயல்படுத்த ஒரு பெண் பணியாளர்கள் பொறுப்பாக மாற்றுப் பணியை செய்யவேண்டும்.

★ பெண்கள் படிக்கும் பள்ளிகளில் பெண்கள் மட்டுமே பணியில் இருத்தல் வேண்டும். இருபாலர் பள்ளிகளில் குறைந்தது 50 சதவீதம் பணியாளர்கள் பெண்களாக இருக்க வேண்டும்.

பாலியல் குற்றச்சம்பவங்கள் எதிர்காலத்தில் நடக்கக் கூடாது என்பது அரசு மிகவும் உறுதியாக இருப்பதால் மேற்கூறியவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். இதில் ஏதேனும் குறைபாடுகள் கண்டறியப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் பள்ளிக்கல்வித் துறை அறிவுறுத்தி உள்ளது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

1.5.2025

## கிருஷ்ணகிரியில் கத்தியை காட்டி மிரட்டி நகை, பணம் கொள்ளை: 6 பேருக்கு 10 ஆண்டுகள் சிறை

கிருஷ்ணகிரி மே.1

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தேவர் உளிமங்கலம் கிராமத்தை சேர்ந்த ஓபிரெட்டி மகன் பையயாரெட்டி (வயது 80) என்பவர் 23.06.2016 அன்று தனது மனைவி நாராயணம்மா என்பவருடன் வீட்டில் உறங்கி கொண்டிருந்தபோது இரவில் வீட்டிற்குள் நுழைந்த 8 பேர் கொண்ட கும்பல் பையயாரெட்டி மற்றும் அவரது மனைவியை கத்தியைக் காட்டி மிரட்டி 22 சவரன் தங்க நகை மற்றும் பணம் ரூ.26 ஆயிரத்தை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.





இது சம்பந்தமாக தளி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து இன்ஸ்பெக்டர் லட்சுமணன் புலன்விசாரணை மேற்கொண்டு வெங்கடேஷ் மகன் சுனில் (24), வெங்கடசாமி மகன் வசந்தகுமார்(எ) வசந்த் (28), கெம்பன்னா மகன் சந்தரேஷ்(எ) சந்திரா (25), ஆதிசேசா மகன் தீபக்(எ) தீபு (22), சின்னஎல்லப்பா மகன் விஜயகுமார்(எ) விஜி (23), முனியப்பன் மகன் முனிகிருஷ்ணன் (23), வெங்கடேசரெட்டி மகன் கோபால்(எ) கோபாலகிருஷ்ணன்(22), நஞ்சாரெட்டி மகன் சதிஷ்குமார் (21) ஆகிய 8 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டனர். இவ்வழக்கின் விசாரணை தேன்கனிக் கோட்டை சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் நேற்று (28.04.2025) இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி, மேற்சொன்ன குற்றவாளிகளான சந்தரேஷ்(எ) சந்திரா முதல் சதிஷ்குமார் வரை உள்ள 6 பேருக்கு 10 ஆண்டுகள் சிறைதண்டனையும், தலா ரூ.15 ஆயிரம் அபராதமும் விதித்து உத்தரவிட்டார். இவ்வழக்கில் சிறப்பாக புலன்விசாரணை மேற்கொண்ட போலீஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் நீதிமன்ற காவலர்களை மாவட்ட எஸ்.பி. பாராட்டினார்.

## தமிழக அரசுக்கு ரூ.50 லட்சம் அபராதம் சென்னை ஐகோர்ட்டு

சென்னை, மே.1

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் உள்ள தனியார் மகளிர் கல்லூரியில் நியமிக்கப்பட்ட ஆசிரியர் அல்லாத ஊழியர்கள் 12 பேருக்கு ஊதியம் வழங்க உத்தரவிடக் கோரி சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. இது குறித்து விசாரித்த சென்னை ஐகோர்ட்டு, ஊழியர்களுக்கு ஊதியத்தை வழங்கும்படி உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்த உத்தரவை எதிர்த்து உயர் கல்வித்துறை செயலாளர், கல்லூரி கல்வி இயக்குநர், கல்லூரி கல்வி கோவை மண்டல இணை இயக்குநர் ஆகியோர் சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது.




இந்த மேல்முறையீட்டு மனுக்களை விசாரித்த நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வு, "1987 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட 12 ஊழியர்களுக்கு அதிகமாக நியமனம் மேற்கொள்ளக்கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் நியமனங்களுக்கு ஒப்புதல் அளித்தது குறித்து கல்லூரி கல்வி இயக்குநர் சி.பூர்ண சந்திரன் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டும். தனியார் மகளிர் கல்லூரிக்கு அனுமதிக்கப்பட்ட ஆசிரியர், ஆசிரியர் அல்லாத ஊழியர் பணியிடங்கள் குறித்த ஆவணங்களையும் அரசு தாக்கல் செய்ய வேண்டும்"என உத்தரவிட்டிருந்தனர்.

இந்த நிலையில் இந்த வழக்கு சென்னை ஐகோர்ட்டில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. உத்தரவின் படி சென்னை ஐகோர்ட்டில் ஆஜரான கல்லூரி கல்வி இயக்குநர் பூரண சந்திரன், நீதிமன்றம் எழுப்பிய எந்த கேள்விகளுக்கும் பதில் அளிக்காமல் தூண் போல் நின்று கொண்டிருந்ததாகவும், இதுதுரதிஷ்டவசமானது எனநீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், ஜி.அருள்முருகன் ஆகியோர் கண்டனம் தெரிவித்தனர்.

மேலும், அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர் பணியிடங்கள் குறித்த ஆவணங்கள் அரசிடம் இல்லை என தெரிவித்ததன் மூலம், நீதிமன்றத்தில் உண்மை வெளிவரவிடாமல் கல்லூரி கல்வி இயக்குநரக அதிகாரிகள் தடுத்துவிட்டதாகவும் நீதிபதிகள் குற்றம்சாட்டினர். தமிழ்நாடு அரசின் இந்த மேல்முறையீட்டு வழக்கை ரூ. 50 லட்சம் அபராதத்துடன் தள்ளுபடி செய்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இந்த வழக்கில் கல்லூரி கல்வி இயக்குநரக அதிகாரிகளின் ஒத்துழைப்பின்மை, பிடிவாதம் காரணமாகவே அபராதம்விதிக்கப்படுவதாகசுட்டிக்காட்டியநீதிபதிகள், "அபராத தொகையில் ரூ.25 லட்சத்தை கல்லூரி கல்வி இயக்குநர் பூரண சந்திரனிடம் வசூலிக்க வேண்டும். மீதமுள்ள ரூ.25 லட்சம் ஆவணங்கள் காணாமல் போனதற்கு காரணமான அதிகாரிகளிடம் வசூலிக்க வேண்டும்,"எனவும் தமிழக அரசுக்கு உத்தரவிட்டனர்.

மேலும் ஆசிரியர் அல்லாத 12 ஊழியர்களுக்கு தலா ரூ.1.50 லட்சத்தை 8 வாரங்களுக்குள் ஊதியமாக வழங்க வேண்டும். தமிழக அரசு வழங்கும் அபராத தொகையில் மீதமுள்ள ரூ.32 லட்சம் தொகையை (cancare foundation) கேன்சர் பவுண்டேஷன், நேத்ரோதயா ஆகிய அமைப்புகளுக்கு தலா ரூ.12 லட்சம் ரூபாய் வீதம் 8 வாரங்களில் வழங்க வேண்டும்" எனவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

கல்லூரி கல்வி இயக்குநரகத்தில் உள்ள ஆவணங்கள் மாயமானதற்கு காரணமான அதிகாரிகளுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் உயர்கல்வித் துறை செயலாளருக்கு உத்தரவிட்டனர்.

## கன்னியாகுமரி: கொலை முயற்சி வழக்கு குற்றவாளிகள் 2 பேருக்கு 7 ஆண்டுகள் சிறை

கன்னியாகுமரி மே.1

கன்னியாகுமரி மாவட்ட எஸ்.பி. ஸ்டாலின் நீதிமன்றத்தில் குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கி தருவதில் முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருகிறார்.

அவர் நீதிமன்ற வழக்கு விசாரணைகளை தொடர்ந்து கண்காணித்து அவ்வப்போது புலன் விசாரணை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி வருகிறார். கடந்த 2021ம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம், ஆரல்வாய்மொழி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தோவாளை பகுதியைச் சேர்ந்த சையதுஆசான் மகன் பீர்முகமது (வயது 33) தாக்கப்பட்டார். அவரை கொலை செய்யும் நோக்கத்தில் கடுமையாக தாக்கியது தொடர்பாக தோவாளை அருகே உள்ள கிருஷ்ணன்புதூர் பகுதியை சேர்ந்த கிருஷ்ணன் மகன் கார்த்திகைகண்ணன், அதே பகுதியை சேர்ந்த சுவாமிநாதன் மகன் வெங்கட் ஆகிய 2 பேர் மீது ஆரல்வாய்மொழி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கின் விசாரணை நாகர்கோவில் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இந் நிலையில் நேற்று நீதிபதி குற்றவாளிகள் 2 பேருக்கும் 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினார். நீதிமன்ற வழக்கு விசாரணை, சாட்சிகள் விசாரணை ஆகியவற்றில் சிறப்பாக செயல்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கி தர காரணமாக இருந்த இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகள், அரசு குற்ற வழக்கறிஞர், நீதிமன்ற காவலர், இந்த வழக்கின் நீதிமன்ற விசாரணையை முறையாக கண்காணித்த நாகர்கோவில் உட்கோட்ட ஏ.எஸ்.பி. ஆகியோரை மாவட்ட எஸ்.பி. பாராட்டினார்.

## சென்னை குளிர்சாதன ரெயில் சேவை அதிகரிப்பு

சென்னை, மே.1

சென்னை ரெயில்வே கோட்டத்தில் நாள்தோறும் 600க்கும் மேற்பட்ட மின்சார ரெயில் சேவைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்தநிலையில், சுட்டெரிக்கும் வெயிலை சமாளிக்க ஏ.சி. வசதி கொண்ட மின்சார ரெயில்களை இயக்க வேண்டுமென தெற்கு ரெயில்வேக்கு பயணிகள் கோரிக்கை வைத்து வந்தனர்.இதனை ஏற்று பெரம்பூர் ரெயில் பெட்டி தொழிற்சாலையில் ஏ.சி. வசதி கொண்ட மின்சார ரெயில் தயாரிப்பு பணி கடந்த ஆண்டு தொடங்கியது. கடந்த ஜனவரி மாதம் பணிகள் முடிந்து மார்ச் மாதம் சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. அதில் திருப்தி ஏற்பட்டதால் ஏ.சி. மின்சார ரெயில் ஏப்.19ம் தேதி முதல் பொது மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது.

சென்னை கடற்கரைசெங்கல்பட்டு வழித்தடத்தில் ஏ.சி. மின்சார ரெயில் சேவை தொடங்கியது. மொத்தம் 12 பெட்டிகள் கொண்ட இந்த ரெயிலில் 1,116 பேர் அமர்ந்தும், 3,796 பேர் நின்று செல்லும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளது.


இந்த ரெயில் சென்னை கோட்டை, பூங்கா, எழும்பூர் மாம்பலம், கிண்டி, பரங்கிமலை, திரிசூலம், தாம்பரம், பெருங்களத்தூர், கூடுவாஞ்சேரி, சிங்கப்பெருமாள் கோவில், பரனூர் ஆகிய ரயில் நிலையங்களில் நின்று செல்கிறது.இந்த ரெயிலில் தானியங்கி கதவுகள், கண்காணிப்பு கேமரா, பயணிகள் தகவல் அமைப்பு உள்ளிட்டவை அமைக்கப்பட்டுள்ளன. இந்த ரெயில் ஞாயிற்றுக்கிழமை தவிர வாரத்தில் 6 நாள்களும் இயக்கப்படுகிறது. இது போன்று சென்னை கடற்கரை தாம்பரம் இடையே வழக்கமாக இயக்கப்படும் மின்சார ரெயில் பாதையில் ஏசி மின்சார ரெயில் இயக்கப்படுகிறது. இனி தினமும் ரெயில் இயக்கப்படும்.

இந்த ரெயில் சென்னை கோட்டை, பூங்கா, எழும்பூர், சேத்துப்பட்டு, நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம், மாம்பலம், சைதாப்பேட்டை, கிண்டி, பரங்கிமலை, பழவந்தாங்கல், மீனம்பாக்கம், திரிசூலம், பல்லாவரம், குரோம்பேட்டை, தாம்பரம் சானிடோரியம் ஆகிய ரெயில் நிலையங்களில் நின்று செல்கிறது.இந்நிலையில், ரெயிலின் நேரம் மற்றும் இயக்கம் குறித்து பயணிகள் 63747 13251 எனும் 'வாட்ஸ்ஆப்' எண்ணில் கருத்து தெரிவிக்கலாம் என்று முன்னதாக தெற்கு ரெயில்வே அறிவிப்பு வெளியிடப்பட்டது.

பயணிகள் அளித்த கருத்துகளின் அடிப்படையில், ரெயில்களின் சேவை அதிகரிக்கப்பட்டுள்ளது. ரெயில்கள் இயக்கப்படும் நேரமும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அதன்படி,மே 2 ஆம் தேதி சென்னை புறநகர் ஏசி ரயில் சேவை 3ல் இருந்து 8 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. மே 2 முதல் 19 ஆம் தேதி வரை புறநகர் ஏசி ரயில் திரிசூலம் ரெயில் நிலையத்தில் நிற்காது. மே 20 முதல் நின்று செல்லும். பயணிகளிடம் இருந்து பெறப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் தெற்கு ரெயில்வே நடவடிக்கை எடுத்துள்ளது.

## தாயை கொலை செய்த வழக்கில் தஷ்வந்த் விடுதலை; தமிழ்நாட்டையே உலுக்கிய வழக்கில் பரபரப்பு தீர்ப்பு

சென்னை, மே.1



சென்னை மாங்காடு அடுத்த மவுலிவாக்கம், மாதா நகர் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வந்தவர் பாபு. இவருக்கு 6 வயதில் மகள் இருந்தார். இதனிடையே, கடந்த 2017 பிப்ரவரி 5ம் தேதி வீட்டிற்கு வெளியே விளையாடிக்கொண்டிருந்த சிறுமியை அதேபகுதியை சேர்ந்த தஷ்வந்த் என்ற இளைஞர் கடத்தி பாலியல் வன்கொடுமை செய்து பின்னர் கொலை செய்தார்.

இந்த சம்பவம் தமிழகத்தையே அதிரவைத்தது. இந்த வழக்கில் ஜாமீனில் வெளியே வந்த தஷ்வந்த் கடந்த 2017டிசம்பர்2ம் தேதி தனது தாய் சரளாவை படுகொலை செய்தார். படுகொலை செய்துவிட்டு மும்பைக்கு தப்பிச் சென்ற தஷ்வந்தை போலீசார் கைது செய்தனர்.

இதனிடையே சிறையில் அடைக்கப்பட்ட தஷ்வந்திற்கு, சிறுமி பாலியல் வன்கொடுமை, கொலை வழக்கில் 46 ஆண்டுகள் சிறை தண்டனையும், தூக்கு தண்டனையும் விதித்து செங்கல்பட்டு கோர்ட்டு உத்தரவிட்டது. ஆனால், தூக்கு தண்டனைக்கு சுப்ரீம் கோர்ட்டு தடை விதித்தது. இதனால் தஷ்வந்த் சிறையில் அடைக்கப்பட்டுள்ளான்.

இந்நிலையில், தாயை கொன்ற வழக்கில் தஷ்வந்த் விடுதலை செய்யப்பட்டுள்ளான். தந்தை பிறழ்சாட்சியாக மாறியதால் போதிய ஆதாரங்கள் இல்லை எனக்கூறி தஷ்வந்தை செங்கல்பட்டு மாவட்ட கோர்ட்டு விடுதலை செய்துள்ளது. தமிழ்நாட்டையே உலுக்கிய வழக்கில் தஷ்வந்தை கோர்ட்டு விடுதலை செய்துள்ளது.

தாயார் கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்ட போதும் சிறுமி பாலியல் வன்கொடுமை, கொலை வழக்கில் தஷ்வந்த் தொடர்ந்து சிறையில் இருப்பான் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கமல்ஹாசனுடன் கூட்டணி அமைக்கும் அஸ்வத் மாரிமுத்து



2020ம் ஆண்டு வெளியான 'ஓ மை கடவுளே' படத்தை இயக்கிய பிரபலமானவர் இயக்குனர் அஸ்வத் மாரிமுத்து. இவரது இயக்கத்தில் சமீபத்தில் 'டிராகன்' படம் வெளியானது. இந்த பிரதீப் ரங்கநாதன், கயாடு லோஹர், அனுபமாபரமேஸ்வரன் ஆகியோர் முக்கியகதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். இப்படம் நல்ல வரவேற்பை பெற்றது.

அதனை தொடர்ந்து இயக்குனர் அஸ்வத் மாரிமுத்து சிம்புவின் 'எஸ்.டி.ஆர் 51' படத்தை இயக்க உள்ளார். இதில் நடிகை கயாடு லோஹர் கதாநாயகியாக நடிக்க உள்ளார். ஏஜிஎஸ் நிறவனம் தயாரிக்க உள்ள இப்படத்திற்குதற்காலிகமாக 'காட்ஆப்லவ்' எனப்பெயரிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அஸ்வத் மாரிமுத்து, கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம்ஸ் நிறுவனத்தை அணுகி கதை சொல்லி உள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. ஆனால் இந்த திட்டம் உறுதி செய்யப்படவில்லை என்று கூறப்படுகிறது. இருப்பினும் இனிவரும் நாட்களில் கமல்ஹாசனுடனான கூட்டணியை அஸ்வத் மாரிமுத்து அமைப்பாரா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## ஐபிஎல்: கொல்கத்தாவுக்கு எதிராக டெல்லி பந்துவீச்சு தேர்வு



18வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி தொடரில் இன்றிரவு (செவ்வாய்க்கிழமை) டெல்லியில் உள்ள அருண்ஜெட்லி ஸ்டேடியத்தில் நடைபெறும் 48வது லீக் ஆட்டத்தில் டெல்லி கேப்பிட்டல்ஸ், நடப்பு சாம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது. அதில் டாஸ் வென்ற டெல்லி அணியின் கேப்டன் அக்சர் படேல் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி கொல்கத்தா அணி முதலில் பேட்டிங் செய்கிறது.

## மாட்ரிட் ஓபன் டென்னிஸ்: இகா ஸ்வியாடெக் காலிறுதிக்கு முன்னேற்றம்



பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள மாட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடர் ஸ்பெயினில் நடைபெற்று வருகிறது.

இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெற்ற ரவுண்ட் ஆப் 16 சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான இகா ஸ்வியாடெக் (போலந்து), ரஷியாவின் டயானா ஷ்னைடர் உடன் மோதினார்.

இந்த போட்டியின் முதல் செட்டை 60 என்ற புள்ளிக்கணக்கில் இகா ஸ்வியாடெக்கும், 2வது செட்டை 76 (73) என்ற புள்ளிக்கணக்கில் டயானா ஷ்னைடரும் கைப்பற்றினர். தொடர்ந்து வெற்றியாளரை தீர்மானிக்கும் 3வது செட்டில் அனல் பறந்தது.

இந்த செட்டில் ஆரம்பம் முதலே அபாரமாக செயல்பட்ட ஸ்வியாடெக் 64 என்ற புள்ளிக்கணக்கில் டயானா ஷ்னைடரை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

## எனக்காக என் மனைவி பல தியாகங்களை செய்துள்ளார் அஜித் குமார்



சினிமா மற்றும் கார் பந்தயத்தில் சிறந்து விளங்கும் அஜித் குமாரின்செயலைபாராட்டும்விதமாகஜனாதிபதிதிரவுபதி முர்மு அவருக்கு பத்மபூஷன் விருது வழங்கி கவிரவித்தார். அந்த விருது வழங்கும் விழாவில் அஜித் குமார் குடும்பத்தினரும் கலந்து கொண்டார். இந்திய அரசின் உயரிய விருதுகளின் ஒன்றாகப் பார்க்கப்படும் பத்மபூஷன் விருதை அஜித்குமார் பெற்றதற்கு, அவருக்கு பலரும் வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இதற்கிடையில் பேட்டி ஒன்றில் கலந்து கொண்ட நடிகர் அஜித் குமார், "பத்மபூஷன் விருது வாங்கியதை நினைத்து பெருமையாக கருதுகிறேன். இதுபோன்ற விருதுகளை வாங்கும் போது தான் நாம் சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறோம் என்பது தெரிகிறது. நான் சரியான பாதையில்இருப்பதுபோல்உணர்கிறேன்.33வருடங்களாக என் வேலையை நேசித்து செய்கிறேன், என்னுடைய வாழ்க்கையை நான் எளிதாக வாழ விரும்புகிறேன்" என தெரிவித்தார்.

மேலும், "எனக்கு மிகப்பெரிய பலம் என் குடும்பம் தான். இந்த நேரத்தில் என்னுடைய மனைவி ஷாலினியை பற்றி பேச கடமைப்பட்டிருக்கிறேன். எனது வெற்றி தோல்வி என அனைத்திலும் தூணாக நின்றவர் ஷாலினி. நான் ஷாலினியை திருமணம் செய்தபோது பிரபல நடிகையாக இருந்தார். எனக்காக சினிமாவில் நடிப்பதை நிறுத்தி விட்டார். எனக்காக அவர் பல தியாகங்களை செய்துள்ளார். நான் எடுத்த எல்லா முடிவுகளிலும் பக்கபலமாக இருந்திருக்கிறார். எனக்கு கிடைக்கும் எந்த அங்கீகாரமும் எனது மனைவிக்கு சேரும்" என அஜித் தெரிவித்தார்.


## மகளிர் கிரிக்கெட்; இந்திய அணிக்கு அபராதம் விதிப்பு ஏன் தெரியுமா..?



இந்தியா, இலங்கை, தென் ஆப்பிரிக்கா ஆகிய பெண்கள் அணிகள்பங்கேற்றுள்ளஒருநாள்கிரிக்கெட்தொடர்கொழும்புவில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் இந்திய அணி தான் இதுவரை ஆடிய 2 ஆட்டங்களிலும் (இலங்கை, தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக) வெற்றி பெற்று புள்ளிப்பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது.

இந்திய அணி கடந்த 27ம் தேதி நடைபெற்ற ஆட்டத்தில் 9 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தி வெற்றி பெற்றது. தொடர்ந்து இன்று நடைபெற்ற ஆட்டத்தில் 15 ரன் வித்தியாசத்தில் தென் ஆப்பிரிக்காவை வீழ்த்தி இருந்தது.

இந்நிலையில், இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் குறிப்பிட்ட நேரத்திற்குள்பந்துவீசி முடிக்காதகாரணத்தினால்இந்தியஅணிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்திய அணி வீராங்கனைகளுக்கு போட்டி கட்டணத்தில் 5 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இந்திய அணி தனது அடுத்த லீக் ஆட்டத்தில் மே 4ம் தேதி இலங்கையை எதிர்கொள்கிறது.




## உலக நடன தினத்தையொட்டி நடிகை மஞ்சு வாரியர் வெளியிட்ட வீடியோ வைரல்

மலையாள சினிமாவின் முன்னனி நடிகைகளில் ஒருவர் மஞ்சு வாரியர். இவர் தமிழில் 'அசுரன், துணிவு, விடுதலை 2, வேட்டையன்' போன்றபடங்களில்முன்னணிநடிகர்களுடன்இணைந்துநடித்துள்ளார். மேலும் ஆர்யா, கவுதம் கார்த்திக் கூட்டணியில் உருவாகி வரும் 'மிஸ்டர் எக்ஸ்' படத்தில் நடித்து வருகிறார்.

இந்த நிலையில், நடிகை மஞ்சுவாரியர் உலக நடன தினத்தை முன்னிட்டு குச்சிப்புடி நடனமாடிய வீடியோவை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். இந்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

அதாவது, உலகெங்கும் ஏப்ரல் 29ம் தேதி சர்வதேச நடன தினமாக அனுசரிக்கப்படுகிறது. இந்த நாள் புகழ் பெற்ற பாலே நடனக் கலைஞர் ஜீன் ஜார்ஜஸ் கோவ்ரே பிறந்த நாளாகும். அவரது நினைவைப் போற்றும் விதமாக, அவரது பிறந்த தினத்தை சர்வதேச நடன தினமாகக் கொண்டாடி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐ.பி.எல்.: டெல்லிக்கு 205 ரன்கள் இலக்கு நிர்ணயித்த கொல்கத்தா



ஐ.பி.எல். தொடரில் புதுடெல்லியில் இன்று நடைபெற்று வரும் லீக் ஆட்டத்தில் டெல்லி கேப்பிடல்ஸ் மற்றும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் ஆடி வருகின்றன. இந்த ஆட்டத்திற்கானடாசில் வென்ற டெல்லி அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. தொடர்ந்து கொல்கத்தாவின் தொடக்க வீரர்களாக சுனில் நரைன் மற்றும் குர்பாஸ் ஆகியோர் களம் இறங்கினர்.

இதில் குர்பாஸ் 26 ரன்னிலும், சுனில் நரைன் 27 ரன்னிலும், அடுத்து வந்த ரஹானே 26 ரன்னிலும், வெங்கடேஷ் ஐயர் 7 ரன்னிலும் அடுத்தடுத்து அவுட் ஆகினர். தொடர்ந்து ரகுவன்ஷி மற்றும் ரிங்கு சிங் ஜோடி சேர்ந்தனர். இருவரும் நிதானமாக ஆடி ரன்கள் சேர்த்தனர். இதில் ரகுவன்ஷி 44 ரன்னிலும், ரிங்கு சிங் 36 ரன்னிலும் அவுட் ஆகினர்.

தொடர்ந்து ரசல் மற்றும் பவல் ஜோடி சேர்ந்தனர். இறுதியில் கொல்கத்தா 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 204 ரன்கள் எடுத்தது. கொல்கத்தா தரப்பில் அதிகபட்சமாக ரகுவன்ஷி 44 ரன்கள் எடுத்தார். டெல்லி தரப்பில் ஸ்டார்க் 3 விக்கெட் வீழ்த்தினர். தொடர்ந்து 205 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் டெல்லி ஆட உள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.